**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.10.09.2025**

**O.S. No.221/2018**

**வா.சா.1- மகாராஜா**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் என்னுடைய இடம் என கேட்டு வழக்குப் போட்டுள்ளேன். வழக்குச் சொத்தினுடைய சர்வே எண் என்ன என்றால் புதிய நம்பர் 1472. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் சரியாகத் தெரியவில்லை. சர்வே எண்.1472 க்கு தென்பக்கம் என்ன உள்ளது என்றால் தெரு உள்ளது அது எனக்குப் பாத்தியப்பட்டது. சர்வே எண்.1472 க்கு மேல்பக்கம் என்ன உள்ளது என்றால் மாடசாமி என்ற மாயச்சந்திரன் வீடு உள்ளது. என் வீட்டுக்கு கீழ்பக்கம் என்ன உள்ளது என்றால் ஓடை உள்ளது ஓடைக்கு அடுத்து புஞ்சை உள்ளது. நான் வழக்கில் சொல்லியுள்ள 3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்கள் கிழமேல் பாதை என்றால் சரிதான் அது எங்கள் இடத்தில் இருக்கிறது. மேற்படி 3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்கள் கிழமேல் பாதையை அரசு பராமரித்து வருகிறது என்றால் சரிதான். 3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்கள் கிழமேல் பாதைக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் மற்றும் வரைபடத்தைப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்கள் கிழமேல் பாதைக்கான வருவாய்த்துறை ஆவணங்களில் அரசுக்குப் பாத்தியப்பட்ட தெரு என உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது நீதிமன்ற ஆணையர் மூலமாக தாவா சொத்தை அளந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் நில அளவையர் வரைபடம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் நில அளவையர் வரைபடத்தில் 3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்கள் கிழமேல் பாதை என ஆணையர் சொல்லி உள்ளார் என்றால் சரிதான் அது எங்கள் இடத்தில் முடிகிறது.

3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்கள் அது எங்கள் இடத்தில் முடிகிறது என நீ.ம.,சா.ஆ.1 முதல் 3 ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் நில அளவையர் வரைபடத்திற்கு ஆட்சேபணை கொடுத்துள்ளேனா என்றால் தெரியவில்லை. 3 வது மற்றும் 4 வது தபசில் சொத்துக்களான பாதை தொடர்பாக எனக்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளான பால்துரை, பரமசிவன், துரை ஆகியோர்களுக்கு இடையில் பிரச்சனை உண்டு என்றால் சரிதான். நான் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் நான் O.S.No.226/2008 வழக்கு இதே பாதைக்காக தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி O.S.No.226/2008 வழக்கில் அரசை தரப்பினராக கட்சி சேர்க்கவில்லை என்றால் தெரியாது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.10 16:07:38 +0530